டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 24.10.2025 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 102 - Madurai | Online Edition

# தாவர எண்ணெய் பொருட்கள்

# 2011 திருத்தத்தை கடைபிடிக்காவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

புது தில்லி, அக்.23

நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் உள்ள உணவு மற்றும் பொது விநியோகத் துறை, தாவர எண்ணெய் பொருட்கள், உற்பத்தி மற்றும் கிடைக்கும் தன்மை (ஒழுங்குமுறை) ஆணை, 2011-ல் (விஓபிபிஏ ஆணை) ஒரு முக்கிய திருத்தத்தை அறிவித்துள்ளது.

திருத்தப்பட்ட விஓபிபிஏ ஆணை, 2025, இந்தியாவில் சமையல் எண்ணெய் துறை முழுவதும் அதிக ஒழுங்குமுறை மேற்பார்வை மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

திருத்தப்பட்ட ஆணையின் கீழ், அனைத்து சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள், பதப்படுத்துபவர்கள், கலப்பான்கள், மீண்டும் பேக் செய்பவர்கள் மற்றும் சமையல் எண்ணெய் விநியோகச் சங்கிலியில் ஈடுபட்டுள்ள பிற பங்குதாரர்கள் விஓபிபிஏ ஆணையின் கீழ் பதிவு செய்து, அறிவிக்கப்பட்ட இணையவழி தளம் மூலம் மாதாந்திர உற்பத்தி மற்றும் இருப்பு வருமானத்தை சமர்ப்பிப்பது இப்போது கட்டாயமாகும்.

நாடு முழுவதும் உள்ள கணிசமான எண்ணிக்கையிலான சமையல் எண்ணெய் அலகுகள் ஏற்கனவே தேசிய ஒற்றை சாளர அமைப்பு தளத்தில் பதிவு செய்துள்ளன. மேலும் https://www.edibleoilindia.in என்ற இணையதளத்தில் தங்கள் மாதாந்திர வருமானத்தை தொடர்ந்து சமர்ப்பித்து வருகின்றன.

# நெற்பயிரில் குலை நோய் மற்றும் பழநோயின் தாக்குதலைக் கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை



புதுக்கோட்டை, அக்.22

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது வானிலை மேக மூட்டமாகவும், காற்றில் ஈரப்பதம் அதிகமாகவும் இருப்பதனால் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரில் குலைநோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்திட கீழ்க்கண்ட வழிமுறைகளைக் கடைப் பிடிக்குமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

**குலைநோயின் அறிகுறிகள்**

நாற்றங்காலில் தொடங்கி அனைத்து வளர்ச்சிப் பருவங் களிலும் குலைநோய் நெற்பயிரைத் தாக்குகிறது. இலைகளின் மேல் பழுப்பு நிறத்தில் சாம்பல் நிற மையப் பகுதியுடனும் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண்வடிவப் புள்ளிகள் காணப்படும். பல புள்ளிகள் ஒன்று சேர்ந்து பெரிய ஒழுங்கற்ற திட்டுக்களை உருவாக்கும்.

இந்நோய் தீவிரமாகத் தாக்கும்போது பயிர் முழுவதும் எரிந்தது போன்று தோற்றமளிப்பதால் குலைநோய் எனப்படுகிறது. நெற் பயிரின் கழுத்துப் பகுதியில் இந்நோய் தாக்கும்போது கறுப்பு நிறமாக மாறிக் கதிர்மணிகள் சுருங்கியும், கதிர்கள் உடைந்தும் தொங்கும். இந்நிலையில் இது ‘கழுத்துக் குலைநோய்’ எனப்படும். இந்நோய் நெற்பயிரின் கணுக்களில் தாக்கும்போது அவை கறுப்பு நிறமாக மாறி உடைந்துவிடும் நிலையானது ‘கணுக்குலை நோய்’ எனப்படும்.

**மேலாண்மை முறைகள்**

குலைநோயைக் கட்டுப்படுத்திட விவசாயிகள் ஒருங்கிணைந்த

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மேலாண்மை முறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். நோயற்ற பயிரிலிருந்து விதைகளைத் தேர்வு செய்ய வேண்டும். நடவு வயலில் நோயற்ற நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். வயலிலும் வரப்பிலும் உள்ள களைகளை அகற்றிட வேண்டும். இந்நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்திட டிரைசைக்ளோசோல் 75 டபிள்யு.பி என்ற மருந்து 200 கிராம் அல்லது அசோஸ்க் சிட்ரோபின் 25 எஸ்.சி என்ற மருந்து 200 மி.லி இதில் ஏதேனும் ஒன்றை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.



## நெற்பழ நோய்

நெற்பயிரினைத் தாக்கும் பழநோய், நெற்கதிர் மற்றும் மணிகளைத் தாக்கிச் சேதம் விளைவிக்கிறது. பாதிப்படைந்த நெல்மணிகள் மஞ்சள் நிறத்துடன் பழுத்துக் காணப்படும். முதிர்ச்சியடையாத மணிகள் உடைந்து காணப்படும். நெல் மணிகள் பதராகி அவற்றின் தரம் முற்றிலும் பாதிக்கப்படும். பழநோயினால் பாதிப்படைந்த வயல்களில் அறுவடைக்குப் பின் வைக்கோல் மற்றும் தாள்களை அழித்துவிட வேண்டும். இதனைக் கட்டுப்படுத்திட கதிர்பிடிக்கும் தருணம் மற்றும் 50 சதம் கதிர் வெளிவரும் தருணம் ஆகிய இரண்டு தருணங் களிலும் ஒரு ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு 77 டபிள்யு.பி என்ற மருந்து 500 கிராம் அல்லது ஹெக்சாகனசோல் 5 இ.சி என்ற மருந்து 400 மி.லி இதில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு நெற்பயிரில் தோன்றும் குலைநோய் மற்றும் பழ நோயினைக் கட்டுப்படுத்திடுமாறும், மேலும் கூடுதல் விவரங் களுக்குத் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகிடுமாறும் புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆலோச னை தெரிவித்துள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# சம்பா சிறப்பு பருவ நெல் பயிருக்கு காப்பீடு செய்ய 31ஆம் தேதி கடைசி நாள்

கிருஷ்ணகிரி, அக்23

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சம்பா சிறப்பு பருவ நெல் பயிருக்கு காப்பீடு செய்ய வரும் 31ஆம் தேதி கடைசி நாள் என்று வேளாண்மை இணை இயக்குநர் கூறியுள்ளார்.

ஒரு ஏக்கருக்கான பயிர்க் காப்பீட்டுத் தொகை ரூ.38,300/-ல் விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.574.50 மட்டும் காப்பீட்டுக் கட்டணமாக நெற்பயிருக்கு செலுத்தினால் போதும்.

விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யும்போது, முன்மொழிவு விண்ணப்பம், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு பசலிக்ககான அடங்கல், வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து கட்டணத் தொகையை செலுத்திய பின் அதற்கான ரசீதையும் பொது சேவை மையங்களில் பெற்று கொள்ளலாம்.




விவசாயிகள் காப்பீடு செய்ய கடைசி நாள் 31.10.2025. எனவே, கடைசி வரை தாமதிக்காமல் முன் கூட்டியே காப்பீடு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விபரங்களுக்கு தங்கள் வட்டாரத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர்களை தொடர்பு கொள்ளவும். மேலும் 14447 என்ற கட்டணமில்லா எண்ணிலும் தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை கேட்டு தெளிவு பெறலாம் என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# மக்காச்சோள பயிரில் படைப்புழு, தண்டு அழுகல் மற்றும் வேர் அழுகல் நோய் மேலாண்மை குறித்து ஆலோசனை

பெரம்பலூர், அக்.23

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம் வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) கோ.சௌமியா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் விவசாயிகளுக்கு கூறியதாவது,




பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம் வேளாண்மை துறையில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எஸ். பாபுவின் வழிகாட்டுதலின் படியும், வேளாண்மை துணை இயக்குனர்களின் ஆலோசனை படியும் மக்காச்சோள பயிரில் படைப்புழு, தண்டு அழுகல் மற்றும் வேர் அழுகல் நோய் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை கூறினார்.

படைப்புழு மேலாண்மையில் மக்காச்சோளம் விதைத்த 15 முதல் 20 ஆம் நாளில் குளோரோன்டரினிலிபுரோல் 18.5 SC 80 மிலி அல்லது ஃப்ளூபெண்டியாமைடு 480 SC 80 மிலி ஏக்கருக்கு தெளிக்கவும். பின் விதைத்த 20 -30 ஆம் நாள் ஏக்கருக்கு குளோரோன்டரினிலிபுரோல் 0.4% GR 4 கிலோ குருணையை இடவேண்டும்.

விதைத்த 25 முதல் 40 ஆம் நாளில் ஏக்கருக்கு ஸ்பினோடோரம் 11.70% SC 100 மிலி அல்லது எமாமெக்டின் பென்சோயட் 5 SG 80 கிராம் அல்லது நோவாலூரான் 10% EC 300 மில்லி லிட்டர் தெளிக்க வேண்டும். பாதிப்பு அதிகமாக இருப்பின் நோவலூரான் 5.25% மற்றும் எமாமெக்டின் பென் சோயட் 0.9% SC 100 மிலி ஒரு ஏக்கருக்கு தெளிக்க வேண்டும். பயிர் சுழற்சி செய்ய வேண்டும்.

பேசிலிலஸ் சப்டிலிஸ் அல்லது டிரைக்கோடெர்மா விரிடி 1 கிலோ/ஏக்கர், 20 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து பத்து நாட்கள் வைத்திருந்து பின் வயலில் இடவும் அல்லது மணலுடன் கலந்த 20 நாட்களுக்குப் பின் வயலில் இடவும்.

காப்பர் ஆக்சிகுளோரைடு 45% அல்லது காப்பர் சல்பேட் 47.15% அல்லது மேன்கோசெப் 30% நிம்றா 800 கிராம் மருந்தை ஏக்கருக்கு 500 மிலி பயிரினை சுற்றி ஊற்றி விட வேண்டும் அல்லது தியோபனேட் மெத்தில் 38% மற்றும் காசுகமைசின் 2.21% SC மருந்தை ஏக்கருக்கு 400 மிலி என்ற அளவிலான மருந்தினை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இதுபோன்று மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மக்காச்சோள பயிரில் படைப்புழு, தண்டு அழுகல் மற்றும் வேர் அழுதல் நோயினை கட்டுப்படுத்தி நல்ல மகசூலை பெற வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) கேட்டுக் கொண்டார்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நபார்டு வங்கி மேலாளர் அங்கக மிளகாய் சாகுபடி - வயல் ஆய்வு



விருதுநகர், அக்.23

விருதுநகர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் சார்பாக விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டாரத்திலுள்ள பரளச்சி மற்றும் அதனை சார்ந்த செங்குளம், கீழ்குடி கிராமங் களில் சாகுபடி செய்யப்பட்ட மிளகாய் நாற்றங்கால் & நடவு வயலை 22.10.25 யன்று விருதுநகர் மாவட்ட நபார்டு வங்கி மேலாளர் அனுஜா எலிசபெத் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மிளகாய் நாற்றங்கால் மேட்டுபாத்தி முறை (RAISED BED & சாதாரண முறையில் நாற்றங்காலில் வளர்க்கப்பட்ட மிளகாய் செடிகளின் வித்தியாசங்களை விவசாயி களிடத்தில் எடுத்துக் கூறியதுடன் மேட்டு பாத்தியில் விதைக்கப் பட்ட செடிகள் திடகாத்திரமாகவும் வளிப்பாக உள்ளதை விவசாயி களிடத்தில் எடுத்துக்காட்டி கூறினார். விரைவாக அங்கக சான்றிதழ் பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் பரளச்சி FPO செயல் அலுவலரைக் கேட்டுக் கொண்டார். மேலும் மிளகாய் நடவு செய்யப்பட்ட வயல், சொட்டு நீர்ப்பாசன அமைக்கப்பட்ட பூமிநாதன் இராமசாமி தோட்டங்களை பார்வையிட்டார். மேலும் புதியதாக அமைக்கப்பட்டு வரும் சேகரிப்பு மையம் கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட சிசிடி FPO ஒருங்கிணைப்பாளரும் சேவையூர், FPO செயல் அலுவலருமான பார்த்த சாரதி கூறுகையில் விருதுநகர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் சார்பாக இந்த ஆண்டிலே முதன்முறையாக 200 ஏக்கரில் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் புவிசார் குறியீடு பெற்ற மிளகாய் வத்தல் சாகுபடியை அங்கக முறையில் (ORGANIC CULTIVATION) செய்யப்பட்டு, NPOP) ORGANIC CERTIFICATION வாங்கிட ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

அதுமட்டுமல்ல 10 விவசாயிகளுக்கு (விதைபண்ணை) சொட்டு நீர் பாசனம் மற்றும் களையை தடுக்க ரப்பர் சீட்டு (MULCHING POLY THENE SHEET) வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அக்ரி அட்வைசர் சந்திர சேகரன் மிளகாய் நர்சரி மற்றும் நடவு செய்த வயலை ஆய்வு செய்து கூறுகையில், அதிகபடியான தேங்கி உள்ள தண்ணீரை வடித்துவிட்டு வேர் அழுகல் கட்டுப்படுத்திட டி.விரிடி கரைசலை தூர் பகுதியில் ஊற்றிட கூறினார். சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை கரைசல் 5% தெளிக்க கூறினார். நடவு செய்ய போகும் வயலில் ஜிவமிர்த கரைசல் தயாரித்து பயன்படுத்த வேண்டுமாய் கூறினார். இதனால் மண்ணில் நுண்ணுயிர் பெருக்கம் அதிக மாவதால் பயிர் வளர்ச்சி திடகாத்திரமாக இருக்குமென கூறினார்.

இறுதியாக விருதுநகர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயல் அலுவலர் அருண்குமார் கூறுகையில், மிளகாய் சாகுபடியின் ஒவ்வொரு செயல்பாடுகளையும் உடனுக்கு உடன் பதிவேட்டில் பதிவு செய்வதாக கூறினார். மேலும் இந்த FPOயின் செயல்பாடுகளுக்கு சிசிடி நிர்வாக இயக்குநர் பத்மாவதி, திட்ட இயக்குநர் ஜான்பிரிட்டோ மற்றும் நபார்டு வங்கி மதுரை MABIF உறுதுணையாக உள்ளதாக தெரிவித்தார்.

## பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

சேலம், அக்.23

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது, வறட்சி, புயல், மழை போன்ற எதிர்பாராத இயற்கை இடர் பாடுகளால் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்து கொள்வதற்கு பாரத பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் இணைந்து விவ சாயிகள் பயன்பெறலாம். குறிப்பாக 2025 -26 ஆம் ஆண்டு ராபி பருவத்தில் தட்டைப்பயறு பயிரிட்டுள்ள விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.252/ நவம்பர் 30, நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் ரூ.568/- நவம்பர் 15, சோளம் பயிரிட்டுள்ள விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.150, டிசம்பர் 16, நிலக்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.326/- டிசம்பர் 30ம் தேதிக்குள் செலுத்தியும் பயன் பெறலாம். எனவே பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன், அடங்கல், நில உரிமை கணினி பட்டா, ஆதார் அட்டை நகல், நடப்பில் உள்ள வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்துடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள், பொதுசேவை மையங் களுக்கு சென்று காப்பீட்டு தொகை செலுத்தி இடர்பாடு ஏற்படும் காலத்தில் இழப்பீட்டு தொகை பெற்று பயன் பெறலாம் என தெரிவித்துள்ளார்.

# சி.நாராயணசாமிநாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான அதிக மகசூல் விருது பெற விவசாயிகளுக்கு அழைப்பு

திருச்சி, அக்.23

செம்மை நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெறும் விவசாயிகள், விருது பெற விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

இது குறித்து திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறையின் மூலம் நெல் சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினை கடைப்பிடித்து மாநிலத்தில் அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிகளுக்கு சி.நாராயணசாமிநாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் கலந்து கொண்டு மாநில அளவில் முதலிடம் பெறும் விவசாயிகளுக்கு நாராயணசாமி நாயுடு விருது மற்றும் பரிசு, முதல் பரிசு ரூ.5 இலட்சம், சிறப்பு பரிசு மற்றும் ரூ.7000 மதிப்புள்ள பதக்கம் வழங்கப்படும்.

இப்போட்டியில் கலந்துகொள்ளும் விவசாயிகள் நெல்லிற்கு குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலம் சொந்தமாகவோ அல்லது குத்தகையாகவோ திருந்திய நெல் சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும். மேலும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நெல் இரகத்தை சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும். மேலும் விவசாயி தொடர்ந்து மூன்றாண்டுகள் திருந்திய நெல் சாகுபடி செய்த முன்னோடி விவசாயிகளாக இருக்க வேண்டும். இப்போட்டியில் பங்குபெறும் விவசாயிகளின் வயலில் குறைந்தபட்சம் 50 சென்ட் பரப்பளவில் பயிர் அறுவடை பரிசோதனை செய்யப்படும்.

எனவே, மேற்குறிப்பிட்ட தகுதி கொண்ட விவசாயிகள் இப்போட்டியில் பங்குபெற விரும்பினால் நிலத்தின் சிட்டா, அடங்கல் மற்றும் ஆதார் அட்டையுடன் தங்கள் பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை நேரில் அணுகி பூர்த்தி

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு கட்டணமாக ரூ.150 மட்டும் செலுத்தி பதிவு செய்துகொள்ள வேண்டும். போட்டி நடுவர்கள் முன்னிலையில் பயிர் அறுவடை பரிசோதனை செய்யப்படும். வெற்றியாளர்களை அறிவிப்பதில் வேளாண்மை இயக்குநரின் தலைமையிலான மாநில அளவிலான குழுவின் முடிவே இறுதியானது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட விவசாயிகள் அனைவரும் இப்போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு திருச்சிராப்பள்ளி, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா கேட்டுக் கொண்டுள்ளார்.



# வேப்ப மரத்தில் பால் வடிவது ஏன்?



வேப்ப மரத்தில் பால் வடிவது ஆன் மீகமா? அறிவியலா? என்று பார்க்கும் போது அவரவர் பார்வையில் தான் இருக்கு. வேப்ப மரம் மட்டுமல்ல ஆல மரம், அத்தி மரம், பலா, பப்பாளி போன்ற மரங்களிலும் பால் வடிகிறது. இதுபோல கள்ளி, எருக்கு செடி போன்ற செடிகளிலும் பால் வடிகிறது. இதை எதனால் எப்படி வடிகிறது என்பதை பார்ப்போம்.

**பால் வடிய காரணம் என்ன?**

நன்றாக வளர்ந்த முதிர்ந்த மரங்களில் தான் பால் வடிகிறது. ஓரளவு நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் உள்ள மரங்களில் தான் பால் வடியும். வறண்ட வறட்சியான பகுதியில் உள்ள மரங்களில் பால் வடிவதை பார்க்க முடியாது. பொதுவாக மரங்கள் (தாவரங்கள்) தங்களுடைய உணவு தேவைகளை தங்களுடைய இலைகள் மூலமாக சூரிய ஒளியின் துணை யோடு தயாரித்து பயன்படுத்துகிறது என்பது நாம் அறிந்ததே. இந்த மரங்களில் உள்ள மாவுசத்து உணவு (ஸ்டார்ச்) சில சமயங்களில் மரங்களில் உள்ள அதிகப்படியான நீரில் கரைய தொடங்கி அவை சுக்ரோஸ்-ஆக மாறி மரப்பட்டையின் திசுக்களை உடைத்து கொண்டு (புளோயம் செல்) வழியாக பாலாக பீறிட்டு வருகிறது. இது தான் மரங்களில் பட்டைகள் வழியாக பாலாக வடிகிறது. சில சமயங்களில் இவற்றை தொட்டு சுவைத்து பார்த்தால் இனிப்பாக இருக்கும். இதற்கு காரணம் அதிகப்படியான ஸ்டார்ச் மாவுசத்து கரைந்ததால் தான். நமக்கு தோலுக்கு அடியில் இரத்தக்குழாய்கள் இருப்பது போல, மரத்தின் மேற்புற பட்டைகளுக்கு அடியிலே சைலம், புளோயம் என்ற இருகுழாய்கள் உள்ளன.

**சைலம், புளோயத்தின் பணிகள் என்ன?**

**சைலம் (XYLEM)**

இது தாவரங்களின் நீர் மற்றும் தாதுகளை வேர்களிலிருந்து தண்டு மற்றும் இலைகளுக்கு கொண்டு செல்லும். இது கடத்தும் திசு என அழைக்கப்படுகிறது.

### புளோயம் (PHYLOUM)

இது தாவரங்களில் உள்ள வாஸ்குலர் திசு (VASCULAR TISSUE), இது இலைகளில் ஒளிச்சேர்க்கை மூலமாக தயாரிக்க படும் சர்க்கரை மற்றும் கரிம சத்துகளை மற்ற பகுதிக்கு கொண்டு செல்லும் திசுவாகும். இது TRANSLOCATION முறையாகும். இது வெடித்து பாலாக மரப்பட்டைகளில் வடிவதற்கு உதவுகின்றன. ஆனால் கிராமப்புற மக்களை இதனை ஆன்மிகமாக பார்த்து மரத்திற்கு மஞ்சள் ஆடை கட்டி பூஜை புனஸ்காரம் செய்வதுண்டு. கள்ளி எருக்கு செடியில் அதிகப்படியான நீராவிபோக்கு ஏற்படுவதால் பால் வடிகிறது. இது இயற்கையான நடைமுறை தான்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு!

சேலம், அக்.23

எதிர்பாராத இயற்கை இடர்பாடுகளால் இழப்பு ஏற்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கவும், நிலையான வருமானம் கிடைக்கச் செய்து அவர்களை விவசாயத்தில் நிலைபெற செய்யவும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் மத்திய அரசின் புதிய வழிகாட்டுதலின்படி காப்பீடு திட்டத்தில் சேர சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

வீரபாண்டி வட்டாரத்தில் ராபி பருவத்தில் 2025ல் நெல்–II பயிருக்கு பிரிமீயத் தொகையாக ஒரு ஏக்கருக்கு ரூ.568/–நவம்பர் 15 வரையிலும், சோளம் பயிருக்கு (வேம்படிதாளம் குறுவட்டதிற்கு உட்பட்ட வருவாய் கிராமங்கள் மட்டும்) பிரிமீயத் தொகையாக ஒரு ஏக்கருக்கு ரூ.150 /– டிசம்பர் 16 வரையிலும் பயிர் காப்பீடு செய்–யலாம்.

எனவே விவசாயிகள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் அடங்கல், நில உரிமை பட்டா, ஆதார் அட்டை நகல் மற்றும் நடப்பில் உள்ள சேமிப்பு வங்கி கணக்கு புத்தகத்துடன் உரிய பிரீமியத் தொகையை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வணிக வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்களை செலுத்தி பயிர் காப்பீடு செய்து இடர்பாடு ஏற்படும் காலத்தில் பயிர் காப்பீடுத் தொகை பெற்று பயன் பெறலாம் என்று கூறப்பட்டுள்ளது.

# இப்கோ – சங்கட ஹரன் பீமா யோஜனா–விவசாயிகள் இலவச விபத்துக் காப்பீட்டு திட்டம்

சென்னை, அக்.23

இப்கோ – சங்கட ஹரன் பீமா யோஜனா என்பது விவசாயிகள் பாதுகாப்பை முன்னிறுத்தி உருவாக்கப்பட்ட இலவச விபத்துக் காப்பீட்டு திட்டமாகும். இத்திட்டம் மூலம், இப்கோ நானோ உரங்கள் மற்றும் குருணை உரங்களான (யூரியா, டி.ஏ.பி, காம்ப்ளக்ஸ்) பயன்படுத்தும் விவசாயிகள் விபத்துக் காப்பீடு பெறும் வாய்ப்பு பெறலாம்.

**காப்பீட்டு தொகை**


● ஒரு நானோ பாட்டில் (நானோ யூரியா அல்லது நானோ டி.ஏ.பி வாங்கினால் ரூ.10,000/- மதிப்புள்ள விபத்துக் காப்பீடு வழங்கப்படுகிறது.

● ஒரு வருடத்திற்கு அதிகபட்சம் 20 பாட்டில் வரை வாங்கி, ஒரு விவசாயி வருடத்திற்கு அதிகபட்சம் ரூ.2,00,000/- வரை காப்பீடு பெறலாம்.

இத்தகைய திட்டம், விவசாயிகளை நவீன நானோ உரங்களை பயன்படுத்த ஊக்கப்படுத்துவதோடு, அவர்களின் வாழ்வாதாரத்திற்கும் பாதுகாப்பளிக்கின்றது.

எனவே, விவசாயிகள் நானோ உரங்களை வாங்குவதன் மூலம் சிறந்த மகசூலுடன் பாதுகாப்பும் பெற்றுக் கொள்ளலாம்.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தேனி மாவட்டத்தில் 12,92,342 மதிப்புள்ள விதைகளுக்கு விற்பனை தடை




தேனி, அக்.23

தேனி மாவட்டத்தில் விதை விற்பனை செய்யும் தனியார் மற்றும் அரசு விரிவாக்க மையங்களில் விருதுநகர் மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் வளர்மதி தலைமையிலான சிறப்பு குழுவினர் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

விவசாயிகளுக்கு தரமான நெல், உளுந்து, மக்காச்சோளம் மற்றும் காய்கறி பயிர்களின் விதைகள் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் மாநிலம் முழுவதும் ஆய்வு மேற்கொள்ளும் வகையில் சிறப்பு ஆய்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை விரிவாக்க மையங்கள், தனியார் விதை சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு செய்தனர். மேலும் ஆய்வின் போது விற்பனை நிலையங்களில் இருப்பில் இருந்த விதை குவியல்களில் இருந்து நெல், வீரிய மக்காச்சோளம், உளுந்து, பாசிப் பயிறு, பருத்தி மற்றும் காய்கறி ஆகிய பயிர்களில் இருந்து 98 விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவற்றின் தரத்தை உறுதி செய்ய தேனி மாவட்டத்தில் செயல்படும் அரசு விதை பரிசோதனை நிலையத்திற்கு ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும் ஆய்வின் போது விற்பனைக்கு இருப்பு வைக்கப்பட்ட விதை குவியல்களின் தரத்தை அறிய கொள்முதல் ஆவணங்கள், பதிவேடுகள், தனியார் விதைகளுக்கான பதிவுச் சான்றுகள், விதை பகுப்பாய்வு முடிவு அறிக்கைகள், இருப்பு பதிவேடு மற்றும் விற்பனை ரசீது ஆகியவை விதைச்சட்டப்படி பராமரிக்கப்படுவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் போது விற்பனை இரசீதுகளில் குவியல் எண் மற்றும் காலாவதி நாள் குறிப்பிட்டு விவசாயின் கையொப்பம் பெற்று பட்டியல் வழங்க விதை விற்பனையாளர்களுக்கு அறிவுரை

வழங்கப்பட்டது. மேலும் ஆய்வின் போது தனியார் விதை விற்பனை நிலையங்களில் 14 விதை குவியல் களில் உரிய ஆவணங்கள் பராமரிக்கப்படாததால் ரூ.12,92,342 மதிப் பிலான 737.46 கிலோ விதைகளுக்கு விற்பனை தடை விதிக்கப்பட்டது. மேலும் விதைச்சட்டம் விதிகளை கடை பிடிக்ககாத கடைகளுக்கு உரிமம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டது. மேலும் ஆய்வின் போது மதுரை, தேனி மாவட்ட மண்டல விதை ஆய்வு துணை இயக்குநர் சிங்கார லீனா மற்றும் விருதுநகர், தூத்துக்குடி, மதுரை மற்றும் தேனி மாவட்ட விதை ஆய்வாளர்கள் உடன் இருந்தனர்.

# வெள்ள சூழ்நிலையில் நெற்பயிர்களை பாதுகாக்கும் முறை

● மழைநீர் தேங்கும்பட்சத்தில் வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை வடித்து, வேர்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

● மழை காலங்களில் உரம் இடுதல், பூச்சி மருந்து தெளித்தல், களைக்கொல்லி இடுதல் போன்றவற்றை தவிர்த்திட வேண்டும்.

● போதிய சூரிய வெளிச்சம் தென்பட்டவுடன், ஏக்கருக்கு 2 கிலோ யூரியாவுடன், 1 கிலோ ஜிங்க் சல்பேட் உரங்களை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து கைத்தெளிப்பான மூலம் இலை வழி உரமாக தெளித்தல் வேண்டும்.

● தூர் வெடிக்கும் பருவத்தில் ஊட்டச்சத்து பற்றாக்குறை தென்பட வாய்ப்புள்ளது. இதனை நிவர்த்தி செய்ய மழை நின்று, நீர் வடிந்த பிறகு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம் இவற்றுடன் 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து, ஒரு இரவு முழுவதும் வைத்து 17 கிலோ பொட்டாசியத்துடன் கலந்து வயலில் இடுதல் வேண்டும்.

● மழைக்காலத்தில் புகையான் பூச்சி தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் செல்லும் பொழுது வேம்பு சார்ந்த பூச்சி மருந்தாகிய அசாடிராக்டின் - 0.03மூ மருந்தினை வேளாண் துறையின் பரிந்துரையின்படி உபயோகப்படுத்த விவசாயி களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனை, வேளாண்மை இணை இயக்குநர், திருச்சிராப்பள்ளி தெரிவித்துள்ளார்.

# சம்பா பருவ நெல்லிற்கு பயிர் காப்பீடு செய்திட நவம்பர் 15 கடைசி நாள் !

இராணிப்பேட்டை, அக்.23

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில், நடப்பு 2025-26 ஆம் ஆண்டு ராபி சிறப்பு பருவத்தில் பயிர் காப்பீடு திட்டதில், வருவாய் கிராம அளவில் சம்பா நெல் பயிர்களுக்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம் என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், திலகவதி தெரிவித்துள்ளார்.

வானிலை ஆய்வு மையம் கனமழை எச்சரிக்கை தெரிவித்து உள்ள நிலையில், எதிர்பாராத இயற்கை இடர்பாடுகள் மூலம் ஏற்படும் பயிர் சேதங்களின் இழப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள ராபி சிறப்பு பருவ பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

சம்பா நெல் பயிர்களை பயிர் காப்பீடு செய்ய வரும் நவம்பர் 15-ஆம் தேதி கடைசி நாளாகும். இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் (குத்தகைதாரர் உட்பட) பயிர் கடன் பெறும் விவசாயிகளும் மற்றும் கடன் பெறாத விவசாயிகள் விருப்பத்தின் பேரில் பயிர் காப்பீடு செய்யலாம்.

இத்திட்டத்தில், நெல் II (சம்பா பருவம்) பயிருக்கு ஒரு ஏக்கருக்கு பிரீமியமாக ரூ.545 /- பிரீமியம் செலுத்தி பயிர் காப்பீடு செய்யலாம்.

இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்ய, அ) சிட்டா, ஆ) நடப்பு ஆண்டு பயிர் சாகுபடி அடங்கல், இ) ஆதார் அட்டை, ஈ) வங்கி கணக்கு புத்தகம், ஆகிய ஆவணங்களுடன், அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கிளைகள், கிராமிய வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொது சேவை மையங்களை (CSC) அணுகலாம்.

தொடர் மழை காரணமாக ஏற்படவிருக்கும் நெற்பயிர் சேதங்களின் இழப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய கேட்டு கொள்ளப்படுகிறது என வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

**DOCTOR OF ASTROLOGY**

**பா.இளங்கோவன்**

M.Sc., MBA, D.Astro, Phd.,

ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும்
தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை
மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**

# பூச்சிகளை விரட்ட பொன்னீம் கரைசல்




தற்போது சாகுபடி செய்யப்படும் பயிர்களில் உயர் மகசூல் பெறும் நோக்கில் நாம் மிக அதிகளவில் செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் பூஞ்சாணக்கொல்லிகளை பயன் படுத்தி வருகிறோம். கடுகு முதல் காய்கறிகள் சாகுபடி வரை அனைத்து பயிர்களையும் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த வீரியம் மிக்க பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துகிறோம்.

இவ்வாறு செயற்கை பூச்சிக்கொல்லிகளை அளவுக்கு அதிகமாக பயன்படுத்தபடுவதால் மனிதர்களுக்கு மலட்டுத் தன்மை, ஆண்மை இழப்பு, அபரிதமான வளர்ச்சி மற்றும் உடல் பருமன் ஆகிய தீங்கான விளைவுகள் மிக விரைவில் ஏற்படுகிறது.

இவற்றை தவிர்க்கவும் மற்றும் சுற்றுசூழலை பாதுகாக்கவும் இயற்கை இடுப்பொருட்களை தயாரித்து பயன்படுத்துவது நமது நோக்கமாக இருக்க வேண்டும். ஆதலால் இயற்கை முறையில் பொன்னீம் என்ற பூச்சி விரட்டியை தயாரிக்கும் முறை, பயன் படுத்தும் முறை மற்றும் பயன்கள் பற்றி இக்கட்டுரையில் பார்ப்போம்.

**தேவையான பொருட்கள் : (1 லிட்டர் தயாரிக்க)**

வேப்ப எண்ணெய் – 450 மி.லி

புங்க எண்ணெய் – 450 மி.லி

ஒட்டும் திரவம் (சோப்பு கரைசல்)– 100 மி.லி

**தயாரிக்கும் முறை**

இம்மூன்றையும் ஒரு பிளாஸ்டிக் பக்கெட்டில் எடுத்து கொண்டு நன்கு கலக்க வேண்டும். இக்கலவையே பொன்னீம் ஆகும்.

### பயன்படுத்தும் முறை

ஒரு லிட்டர் தண்ணீருக்கு 30 மி.லி பொன்னீம் என்ற விகிதத்தில் கலந்து பயிர்களின் மீது தெளிக்க வேண்டும். 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட தெளிப்பானில் 300 மி.லி பொன்னீம் கரைசலை ஊற்றி பின்பு 10 லிட்டர் தண்ணீர் ஊற்றி நன்கு கலந்து தெளிக்க வேண்டும்.

### பயன்கள்

- பயிர்களை விரைவாக மற்றும் அதிகமாக தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்துகிறது.
- காய்கறி பயிர்களை தாக்கும் காய்துளைப்பான் போன்ற பூச்சிகளை சிறப்பாக விரட்ட இக்கரைசல் பயன்படுகிறது.
- பொன்னீம் கரைசலை தெளிப்பதன் மூலம் பயிர்களை தாக்கும் படைப்புழுக்களையும் சிறப்பான முறையில் கட்டுப் படுத்த முடியும்.
- இக்கரைசலை அனைத்து வகையான பயிர்களுக்கும் பயன்படுத்தலாம்.

தகவல் : இரா.ஜெயசங்கரமூர்த்தி, (முதுகலை வேளாண்மை), வேளாண் ஆலோசகர், Mobile : 89404 75344, Email : agrijay102@gmail.com.

## நெல் வயலில் பாசிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

- மணிச்சத்து அதிகமுள்ள நிலங்களில் பாசிகள் அதிகளவில் வளரும். நெற்பயிருக்கு இடப்படும் உரங்களை பாசிகள் எடுத்துக் கொண்டு, நெற்பயிரைவிட வேகமாக வளரும் ஆற்றல் கொண்டது. மேலும் இந்தப் பாசிகள் படரும் தன்மை கொண்டதால், நெற் பயிருக்கு தேவையான காற்றோட்டம் தடைபட்டு பயிர் களுக்கு சத்துக்கள் எடுக்க இயலாத நிலை ஏற்படும்.
- நெற்பயிரின் வளர்ச்சி குன்றி மஞ்சள் நிறமாக மாறி பயிர்கள் கருகிவிடும்.
- நாற்றாங்கால், நேரடி நெல் விதைப்பு மற்றும் நடவு வயல்களில், குறிப்பாக களர் மற்றும் உவர் நிலங்களில் பாஸ்பேட் உரங்களான டிஏபி, கலப்பு உரம் மற்றும் சூப்பர் பாஸ்பேட் அதிகம் பயன்படுத்தப் பட்டால் பாசி மற்றும் ஹைட்ரஜன் சல்பைடு வாயு உருவாகி நாற்றுக்கள் கருகி விடும் நிலை ஏற்படும்.

**மேலாண்மை**

● நாற்றாங்கால் மற்றும் வயல்களில் அதிகபடியான நீர் தேக்கி வைப்பதையும், நீர் தேங்குவதையும் தவிர்க்க வேண்டும்.

● காய்ச்சலும், பாய்ச்சலும் முறையில் வயல் நீர் குழாய் (பானி பைப்) அமைத்தும், திருந்திய நெல் சாகுபடி மேற்கொண்டும் நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

● பாசி அதிகம் படர்ந்துள்ள வயல்களில் கோனோவீடர், ரோட்டரி வீடர் மற்றும் பவர் வீடர் போன்ற இயந்திரங்களை பயன் படுத்தி களையுடன் பாசிகளை நிலத்தில் மடக்கி உழ வேண்டும்.

● உப்பு நிறைந்த ஆழ்குழாய் தண்ணீரை பயன்படுத்தும் போது, வயல்களில் குட்டை அமைத்து நீரைத் தேக்கி வைத்து பின்னர் நாற்றாங்கால் மற்றும் வயல் பாசனத்திற்கு பயன்படுத்த வேண்டும்.

● மண்ணில் உள்ள மணிச்சத்து அதிகமுள்ள டெல்டா மாவட்டங் களில் மணிச்சத்து உரங்கள் இட வேண்டிய அவசிய மில்லை. மணிச்சத்தை கரைத்துக் கொடுக்கும் பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிர் உரத்தை ஒரு ஏக்கருக்கு 200 மிலி என்றளவில் 20 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து நடவுக்கு முன்னர் வயலில் இடவும்.

● ஏக்கருக்கு 2 கிலோ காப்பர் சல்பேட்டுடன் 20 கிலோ மணல் கலந்து தூவி தண்ணீர் பாய்ச்சாமல் இருத்தல் வேண்டும் அல்லது ஏக்கருக்கு ஒரு கிலோ மயில் துத்தத்தை (காப்பர் சல்பேட்) 10 கிலோ மணலுடன் கலந்து நெல் வயலின் வாய் மடையில் சாக்குப்பையில் இட்டு நீர் பாசனம் செய்ய வேண்டும். அல்லது வயலில் நீரை வடிகட்டிய பிறகு 0.5 சதம் மயில் துத்த கரைசலை (5 கிராம் என்ற அளவில் 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும்.

● பிறகும் பாசிகள் தென்பட்டால் 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் மேலும் ஒரு முறை தெளித்து பாசிகளை கட்டுப்படுத்தலாம்.

● மேலும் நடப்பு பயிர் அறுவடை முடிந்தவுடன் அடுத்த நெற்பயிர் சாகுபடிக்கு முன்பு சணப்பு, தக்கைப்பூண்டு போன்ற பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்து மடக்கி உழுவதன் மூலம் களர் உவர் தன்மையின் தாக்கத்தில் குறைவு ஏற்படுத்துவதால் பாசிகளின் தாக்குதலையும் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்.

# தேயிலை உற்பத்தியில் கொப்புளம் கருகல் நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்

தேயிலை (கேமல்லியா சினென்சிஸ்) என்பது வெப்பமண்டல மற்றும் மிதவெப்ப மண்டல நாடுகளில் பரவலாக வளர்க்கப்படும் ஒரு வற்றாத பயிர். தேநீர் குடிக்கும் பாரம்பரியம் கிட்டத்தட்ட 5,000 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டுள்ளது, இன்று இது உலகின் இரண்டாவது மிகவும் பிரபலமான பானமாக உள்ளது. தேயிலை 50க்கும் மேற்பட்ட நாடுகளில் வணிக ரீதியாக பயிரிடப்படுகிறது.




அவற்றில், சீனா, இந்தியா, கென்யா, இலங்கை, துருக்கி, வியட்நாம் மற்றும் இந்தோனேசியா ஆகியவை மிகப்பெரிய உற்பத்தியாளர்கள். தொழில்துறை கணிப்புகளின்படி, உலகளாவிய தேயிலைத் தொழிலின் சந்தை மதிப்பு 2031 ஆம் ஆண்டுக்குள் US$ 93.2 பில்லியனை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தேயிலைத் தொழில் உலகளவில் சுமார் 13 மில்லியன் மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறது. ஒரே தேயிலைத் தோட்டங்களிலிருந்து இலைகளைப் பதப்படுத்தி பறிக்கும் முறையைப் பொறுத்து வெவ்வேறு வகையான தேயிலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றில் சில கருப்புத் தேயிலை, பச்சைத் தேயிலை, ஊலாங் தேநீர், வெள்ளைத் தேயிலை, தூய தேநீர் மற்றும் அடர் தேயிலை. இந்தியா, கென்யா மற்றும் இலங்கை உள்ளிட்ட அனைத்து முக்கிய தேயிலை உற்பத்தி செய்யும் நாடு களிலும் உற்பத்தி செய்யப்படும் மிகவும் பிரபலமான தேயிலை வகை கருப்புத் தேயிலை ஆகும்.

இந்தியாவில் கருப்புத் தேயிலை உற்பத்தி உலகளாவிய மொத்த உற்பத்தியில் 85% ஆகும், மேலும் சில தேயிலைத் தோட்டங்களால் பச்சைத் தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது. சீனாவில் பச்சைத் தேயிலை மிகவும் பிரபலமான தேயிலை வடிவமாகும், அதைத் தொடர்ந்து கருப்புத் தேயிலையும் உள்ளது.

அதன் கடினமான தன்மை இருந்தபோதிலும், தேயிலை செடி நுண்ணுயிர் நோய்க் கிருமிகளால் ஏற்படும் அழிவுகரமான நோய்களுக்கு ஆளாகிறது. தேயிலை நோய்கள் இலை நோய்கள், தண்டு நோய்கள் மற்றும் வேர் நோய்கள் என வகைப்படுத்தப் படுகின்றன. இலை நோய்களில், எக்ஸோபாசிடியம் வெக்சன்ஸ் என்ற பூஞ்சையால் ஏற்படும் கொப்புள கருகல் நோய் (Blister blight) முக்கிய தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நோயாகும்.

அதன் பாலிசைக்ளிக் தொற்று சுழற்சியுடன், பூஞ்சை அதிக ஈரப்பதம் (> 80%) மற்றும் லேசான வெப்பநிலையில் (15 முதல் 25°C வரை), குறிப்பாக மழைக்காலங்களில் செழித்து வளரும். இது தேயிலை செடியின் அறுவடை செய்யக்கூடிய மென்மையான தளிர்களைத் தேர்ந்தெடுத்து பாதிக்கிறது.

இது குறிப்பிடத்தக்க மகசூல் இழப்புகளுக்கு வழிவகுக்கிறது. இது முக்கியமாக மென்மையான இலைகள், மொட்டுகள் மற்றும் இளம் பழங்களை சேதப்படுத்துகிறது, இதன் விளைவாக மகசூல் இழப்பு மற்றும் தரம் குறைகிறது.

**நோய் அறிகுறிகள்**



● ஒரு மாதத்திற்கும் குறைவான வயதுடைய இளம் இலைகளில் சிறிய, துளை அளவு புள்ளிகள் ஆரம்பத்தில் காணப்படும். இலைகள் வளர வளர, புள்ளிகள் வெளிப்படையானதாகவும், பெரியதாகவும், வெளிர் பழுப்பு நிறமாகவும் மாறும்.

● சுமார் 7 நாட்களுக்குப் பிறகு, இலையின் கீழ் மேற்பரப்பில் கொப்புளம் போன்ற அறிகுறிகள் உருவாகின்றன, கொப்புளங்களைச் சுற்றியுள்ள அடர் பச்சை, நீரில் நனைந்த மண்டலங்கள் இருக்கும்.

● பூஞ்சை வித்திகள் வெளியானதைத் தொடர்ந்து, கொப்புளம் வெண்மையாகவும், வெல்வெட்டியாகவும் மாறும்.

● பின்னர் கொப்புளம் பழுப்பு நிறமாக மாறும், மேலும் பாதிக்கப்பட்ட இளம் தண்டுகள் வளைந்து சிதைந்து உடைந்து போகலாம் அல்லது இறக்கலாம்.

**உயிர்வாழ்தல் மற்றும் பரவுதல்**

● நோய்க்கிருமிகள் இலைகள் அல்லது தண்டுகள் மற்றும் விழுந்த தாவர புரவலன் குப்பைகளில் உயிர்வாழ்கின்றன.

● வித்துகள் காற்றினால் பரவுவதன் மூலம் நோய் எளிதில் பரவுகிறது.

**மேலாண்மை முறைகள்**

**காயகற்ப சிகிச்சை (Pruning)**

● கொப்புள நோயால் பாதிக்கப்பட்ட இலைகள் மற்றும் தண்டுகளை வெட்டி அகற்றவும்.

சு அகற்றப்பட்ட கழிவுகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்தி அழிக்கவும்.

**நிழல் மேலாண்மை**

● பூஞ்சைக்கு சாதகமற்ற காற்று சுழற்சியை அதிகரிக்கவும் ஈரப்பதத்தைக் குறைக்கவும் நிழல் தரும் மரங்களின் கிளைகளை உழுவதன் மூலம் ஒழுங்குபடுத்துங்கள்.

**சுகாதாரம்**

● போதுமான அளவு களைகளைக் கட்டுப்படுத்தி, சரியான முறையில் பறித்தல் மற்றும் கத்தரித்தல் முறைகளை உறுதி செய்யுங்கள்.

**எதிர்ப்புத் திறன் கொண்ட சாகுபடிகள்**

- நோயை எதிர்க்கும் தேயிலை வகைகளை நடவும்.

**இரசாயன கட்டுப்பாடு**

- காப்பர் ஆக்ஸிகுளோரைடு (காப்பர் ஆக்ஸிகுளோரைடு) போன்ற பூஞ்சாணக்கொல்லிகளைப் பயன்படுத்தவும்.
- சில நிபுணர்கள், காப்பர் ஆக்ஸிகுளோரைடு உடன் எக்ஸோ கன்சோல் அல்லது பிராப்பிகானாசோல் போன்ற பிற பூஞ்சாணக் கொல்லிகளை கலந்து தெளிக்குமாறு பரிந்துரைக்கின்றனர். இந்த கலவையை 7 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.
- போர்டியாக்ஸ் கலவை அல்லது காப்பர் ஆக்ஸி குளோரைடு 0.1% தெளித்தல்
- ஜூன் முதல் செப்டம்பர் வரை மற்றும் அக்டோபர் முதல் நவம்பர் வரை 5 நாட்கள் இடைவெளியில் ஒரு ஹெக்டேருக்கு 210 கிராம் காப்பர் ஆக்ஸி குளோரைடு + 210 கிராம் நிக்கல் குளோரைடு கலவையை தெளித்தல்
- லேசான மற்றும் மிதமான மழை பெய்யும் சூழ்நிலையில் ட்ரைடிமார்ஃப் 340 மற்றும் 560 மில்லி/ஹெக்டேருக்கு தெளித்தல் திருப்திகரமாக இருக்கும்.

**உயிரியல் மேலாண்மை**

- **நுண்ணுயிர் முகவர்கள் :** சூடோமோனாஸ் ஃப்ளோரசென்ஸ் (Pseudomonas fluorescens 1), ட்ரைக்கோடெர்மா ஹார்சியானம், கிளியோக்ளாடியம் வைரன்ஸ் அல்லது பேசிலஸ் சப்டிலிஸ் போன்ற எதிரியான நுண்ணுயிரிகளின் உயிரியல் சூத்திரங்களை தெளிக்கவும்.
- **சூடோமோனாஸ் ஃப்ளோரசென்ஸ் பயன்பாடு :** நடவு செய்த பிறகு 7, 14 மற்றும் 21 நாள் இடைவெளியில் சூடோமோனாஸ் ஃப்ளோரசென்ஸின் 0.5% கரைசலைப் பயன்படுத்தி தொற்று நோயைக் குறைக்கவும்.

**தடுப்பு நடவடிக்கைகள்**

- ஈரப்பதமான மற்றும் குளிர்ச்சியான வானிலை நோயை தீவிரப் படுத்தும். எனவே, அந்த காலகட்டங்களில் நோயின் அறிகுறி களைக் கண்காணிக்கவும், உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.
- தேயிலை தோட்டத்தில் நல்ல காற்றோட்டத்தை உறுதி செய்யவும்.
- சரியான நேரத்தில் மருந்துகளை தெளிப்பதன் மூலம் நோயின் பரவலைக் கட்டுப்படுத்தலாம்.

தகவல் : **ம.பானுப்பிரியா, உதவிப் பேராசிரியர் (பயிர் நோயியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. Email : banumalai1996@gmail.com**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**